முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1377

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.07.2023, வெள்ளிக்கிழமை

1. ஆறுமுகன் என் அவதார ஞானவடிவே
ஆறுமுகன் என் அவதார ஞானசூட்சுமமே
ஆறுமுகன் என் ஆக்கமான கலியுகத்தின் மகா சொரூபமே
ஐயனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சோபகிருது மிதுனத் திங்கள்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 22 ம் நாள், 07.07.2023, வெள்ளிக்கிழமை)
அரங்கனுக்கு இன்னும் ஆற்றல் கூட
வாசிவென்ற ஞானிகளெல்லாம் என்னை வழிமொழிந்து
வையகத்தில் அரங்கனோடு பெரும்பாதுகாப்பாய் இருந்து ஆற்றல்பட இயங்க
3. இயங்கவே ஆறுமுகன் யான்
இதுகாலம் ஆக்கமுடன் ஞானஅறிவுரை ஆசி தொடர்ந்துரைப்பேன்
பூதலத்தை மீட்பது அரங்கன் சக்தியே
புண்ணியத்தை உலகில் காப்பது அரங்கன் தர்மமே
4. ஆதரவு தந்து கலியுக மக்கள்
அபயமென அரங்கனோடு சேர்ந்துவிட்டால்
சேர்ந்துவிட்டால் உலகம் மாற்றம் பெறும்
சேர்ந்துவிட்டால் உலகே ஞானம் பெறும்
5. நேர்ந்துவந்து அரங்கன் திருவடி பற்றி
நீயே யாவுமென முழு சரணாகதி கொண்டு
கொண்டுவிட வருபவர்க்கெல்லாம் ஞானம்
குருபரன் யான் அரங்கன் வழி நடத்தி அருள்வேன்

6. தொண்டு செய்து அரங்கனே சர்வமும்என தொடர்ந்துவந்து இணைந்து விட்டால்
இணைந்ததோடு அக்கணமே இவ்வுலகம் எந்தன் தலைமைகொண்ட ஞான ஆட்சிக் காலமாக
இணைந்த மக்களுக்கெல்லாம் ஞானிகளாகும்
இலகுவான அற்புதத்தை யான் நடத்தி
7. கலந்து கலந்து மேலவர்கள் துணைகூட
கலியுகம் தன் இடர்களையெல்லாம் இழந்து
இழந்து இழந்து இனி எந்த சக்தியாலும்
இழப்பு துன்பம் பற்றாத பூமியாக
8. ஆகவே ஞான பூமியாக அரங்கன் பலம்
ஞான ஆட்சிக்காலமாக அரங்கன் தர்மம்
வானவர்கள் மெச்ச வழிநடத்தி உயர்த்தும்
வையகமே ஞான யுகமாக மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–